## ‘நீட்’ தேர்வை ரத்து செய்திட ஒன்றிய அரசை வலியுறுத்தி

# மாநில சட்டமன்றங்களில் தீர்மானம் நிறைவேற்றுவீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – மாநில முதலமைச்சர்களுக்கு கடிதம்!

**சென்னை, ஜூன் 30–**

**மாணவர்களின் நலன் கருதி நீட் தேர்வை ரத்து செய்திட ஒன்றிய அரசை வலியுறுத்தும் வகையில் டெல்லி, இமாச்சலப் பிரதேசம், ஜார்கண்ட், கர்நாடகா, கேரளா, பஞ்சாப், தெலங்கானா மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநில முதலமைச்சர்களுக்கு அவர்களது சட்டமன்றங்களில் தீர்மானம் நிறைவேற்றிடக் கோரி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

நீட் தேர்வினை ரத்து செய்திட ஒன்றிய அரசை வலியுறுத்தி நேற்று முன்தினம் (28-6-2024) தமிழ்நாடு சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் அடிப்படையில் டெல்லி, இமாச்சலப் பிரதேசம், ஜார்கண்ட், கர்நாடகா, கேரளா, பஞ்சாப், தெலங்கானா மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநில சட்டமன்றங்களிலும் நீட் தேர்வை ரத்து செய்ய ஒன்றிய அரசினை வலியுறுத்தும் வகையில் தீர்மானம் நிறைவேற்றுமாறு கோரி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மேற்குறிப்பிட்ட மாநில முதலமைச்சர்களுக்கு நேற்று முன்தினம் (28-6-2024) கடிதம் எழுதியுள்ளார். அதன் விவரம் பின்வருமாறு: –

**மாணவர்களின் கனவை சிதறடிக்கும் ‘நீட்’ தேர்வு!**

மருத்துவக் கல்வியின் எதிர்காலம் மற்றும் லட்சக்கணக்கான மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் வாழ்நாள் விருப்பங்கள் தொடர்பான ஒரு முக்கியமான பிரச்சனை குறித்து டெல்லி, இமாச்சலப் பிரதேசம், ஜார்கண்ட், கர்நாடகா, கேரளா, பஞ்சாப், தெலங்கானா மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களின் முதலமைச்சர்களின் கனிவான கவனத்திற்கு கொண்டு வரவே தாம் இந்தக் கடிதத்தை எழுதுவதாகவும், நீட் தேர்வின்போது நடந்த முறைகேடுகள் குறித்த சமீபத்திய பல்வேறு செய்திகள் தேசிய தேர்வு முகமையின் (NTA) பலவீனங்களை வெளிப்படுத்தியதோடு, நீட் தேர்வை எழுதிய பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் கனவுகளையும் சிதறடித்துள்ளதாக முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நீட் தேர்வை அதன் தொடக்கத்திலிருந்தே நாங்கள் தொடர்ந்து எதிர்த்து வருவதை தாங்கள் அறிவீர்கள் என்றும், அனைத்து தொழிற்கல்வி படிப்புகளுக்கும் மாணவர் சேர்க்கை மேல்நிலைத்தேர்வு மதிப்பெண்களின் அடிப்படையில் செய்யப்படவேண்டும் என்றும் தனி நுழைவுத் தேர்வின் அடிப்படையில் மேற்கொள்ளக்கூடாது என்று நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம் என்றும் நீட் தேர்வை எதிர்கொள்ளத் தேவையான மிக அதிகமான பயிற்சிக் கட்டணங்களை செலவிட முடியாத கிராமப்புற மற்றும் ஏழை எளிய குடும்பங்களுக்கு மருத்துவக் கல்வி கற்பதற்கான வாய்ப்புகள் மறுக்கப்படுவதாலேயே நாங்கள் தொடர்ந்து நீட் தேர்வை எதிர்க்கிறோம் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

**‘நீட்’ தேர்வை கைவிடும் வகையில் சட்ட திருத்தம் கொண்டு வருக!**

அந்தவகையில், தமிழ்நாட்டிற்கு நீட் தேர்வில் இருந்து விலக்கு அளிக்கக் கோரியும், பள்ளிக் கல்வியில் மாணவர்கள் பெறும் 12 ஆம் வகுப்பு மதிப்பெண்களின் அடிப்படையில் மருத்துவ சேர்க்கை வழங்கக் கோரியும் இன்று (28.6.2024) சட்டப்பேரவையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளதைக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், நீட் தேர்வுகளில் நடைபெறும் பல்வேறு முறைகேடுகளைக் கருத்தில் கொண்டு, தேசிய அளவில் நீட் முறையைக் கைவிடும் வகையில், தேசிய மருத்துவ ஆணையசட்டத்தில்உரியதிருத்தங்களை ஒன்றிய அரசு செய்ய வேண்டும் என்று தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

**தீவிரத்தை உணர்ந்து மாநில அரசுகள் தீர்மானங்களை நிறைவேற்றுக!**

ஆகவே, இப்பிரச்சினையின் முக்கியத்துவத்தையும், தீவிரத்தையும் கருத்தில் கொண்டு, மாணவர்களின் நலன் கருதி நீட் தேர்வை ரத்து செய்ய ஒன்றிய அரசை வலியுறுத்த உங்கள் மாநில சட்டமன்றத்திலும் இதேபோன்ற தீர்மானத்தை நிறைவேற்றுவது குறித்து பரிசீலிக்குமாறு தாம் கேட்டுக் கொள்வதாகவும் தமது கடிதத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

### தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் சிதிலமடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகள்

# ரூ.1146 கோடி மதிப்பில் 6746 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மறுகட்டுமானம்!

## சட்டப்பேரவையில் விதி எண் 110-ன் கீழ் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஜூன் 30-**

**சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 110 விதியின் கீழ் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் சிதிலமடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.1146 கோடி மதிப்பீட்டில் 6746 அடுக்குமாடி குடியிருப்புகள் மறு கட்டுமானம் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்தார்.**

இதுகுறித்துதமிழ்நாடுசட்டமன்றப்பேரவையில், சிதிலமடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகளை மறுகட்டு மானம் செய்வது குறித்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்த விதி எண்.110 ன்கீழான அறிக்கை வருமாறு:-

பேரவைத் தலைவர் அவர்களே, விதி 110ன் கீழ் அறிக்கை ஒன்றை அவையிலே எடுத்து வைக்க அனுமதி தந்த தங்களுக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, “ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்” என்ற பேரறிஞர் அண்ணா வழி நடந்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், நகர்ப்புரங்களில் வசிக்கும் ஏழையெளிய மக்கள் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வாழச் சிறந்த பல திட்டங்களை உருவாக்கி வருகிறது.

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்ட மேம்பாட்டு வாரியப் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் இதுவரை 29 ஆயிரத்து 439 அடுக்குமாடிக் குடியிருப்புகளும், 1 இலட்சத்து 70 ஆயிரத்து 462 தனி வீடுகளும் கட்டி முடிக்கப் பட்டுள்ளன. மேலும், 172 திட்டப் பகுதிகளில் 79 ஆயிரத்து 94 அடுக்குமாடிக் குடியிருப்புகளும், 89 ஆயிரத்து 429 தனி வீடுகளுக்கான கட்டுமானப் பணிகளும் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன. இந்தத் திட்டப் பணிகளுக்காக 6 ஆயிரத்து 685 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டும் பணியில் மட்டும் கவனம் செலுத்தி, அத்துடன் நின்று விடாமல், இந்த அரசு பழைய அடுக்குமாடிக் குடியிருப்பு களின் மறுசீரமைப்பிலும் கவனம் செலுத்துகிறது. சென்னை மற்றும் இதர நகரங்களில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் பல ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகளில் சில நீண்டகாலப் பயன்பாடு மற்றும் தட்பவெப்பநிலை காரண மாக சிதிலமடைந்துள்ளன. இந்தக் குடியிருப்புகளை முறையாகக் கணக்கெடுத்து, அவற்றை மறுகட்டுமானம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மறுகட்டுமானத்திற்குப் பின் இக்குடியிருப்புகள், புதுமையான, மேம்படுத்தப்பட்ட அம்சங்கள் மற்றும் வசதிகளுடன் பழைய குடியிருப்பு களில் முன்னர் வாழ்ந்த குடும்பங்களுக்கும், இதே திட்டப் பகுதிகளின் அருகில் வாழும் நகர்ப்புற ஏழைக் குடும்பங் களுக்கும் ஒதுக்கீடு செய்யப்படும்.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் தற்போது, தமிழ்நாடு முழுவதும் 1 இலட்சத்து 93 ஆயிரத்து 891 அடுக்குமாடிக் குடியிருப்புகள் பராமரிக்கப் பட்டு வருகின்றன. அவற்றுள், 28 ஆயிரத்து 643 குடியிருப்புகள் சிதிலமடைந்துள்ளதாக தொழில்நுட்ப வல்லுநர் குழுவால் கண்டறியப்பட்டுள்ளன. இவை அனைத்தும் அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் மறுகட்டுமானம் செய்யப்படும்.

இதன் முதற்கட்டமாக, 2024-2025 ஆம் ஆண்டில், சென்னை மாநகரில் கிழக்கு கல்லறை சாலை, கொடுங்கையூர், வ.உ.சி. நகர் போன்ற திட்டப்பகுதிகள், தஞ்சாவூரில் ஏ.வி.பதி நகர் திட்டப்பகுதி மற்றும் திருச்சியில் கோட்டக்கொல்லை திட்டப்பகுதி ஆகியவற்றில் உள்ள 6 ஆயிரத்து 746 அடுக்குமாடிக் குடியிருப்புகள், ஆயிரத்து 146 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மறுகட்டுமானமும் மற்றும் புதிய திட்டப்பகுதிகளில் கட்டுமானமும் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறினார்.

---

### உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய

# பொருட்களை காய்ச்சுதல் - விற்பனை செய்யும் குற்றங்களுக்கு வழங்கப்படும் தண்டனையை கடுமையாக்க சட்ட மசோதா தாக்கல் !

## சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தகவல்!

**சென்னை, ஜூன் 30-**

**சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காவல் துறை மானியக் கோரிக்கையை நேற்று முன்தினம் தாக்கல் செய்தார். இந்த காவல்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பா.ம.க. உறுப்பினர் கோ.க. மணி பேசும்போது முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிக்கிட்டு பேசியதாவது :-**

இங்கு, கூட்டத் தொடர் தொடங்கியதிலிருந்து கடந்த சில நாட்களாகவே கள்ளக்குறிச்சி விவகாரத்தைத் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறோம். இதைத் தான் மீண்டும் உறுப்பினர் கோ.க.மணி அவர்கள் இங்கே எடுத்துப் பேசத் தொடங்கியிருக்கிறார். என்னைப் பொறுத்தவரை, உயிருக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய பொருட்களைக் காய்ச்சுதல், விற்பனை செய்வது போன்ற குற்றங்களுக்கான தண்டனை போதுமானதாகவும் கடுமையாகவும் இல்லை. இதுபோன்ற குற்றங்களுக்கு வழங்கப்படும் தண்டனையை கடுமையாக்கி, இக்குற்றங்களை முற்றிலும் தடுக்க முதற்கட்டமாக, தமிழ்நாடு மது விலக்குச் சட்டம், 1937ல் திருத்த மசோதா ஒன்று நாளை (இன்று) சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படும் என்ற விவரத்தை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிலளித்தார்.

இதனையொட்டி இந்த மசோதா நேற்று தாக்கல் செய்யப்பட்டது.

---

### ஒன்றிய அரசால் மூன்று குற்றவியல் புதிய சட்டங்கள் ஏற்றும் போதே தி.மு.க. எதிர்த்தது:

# ஜூலை 1 முதல் அமல்: நீதித்துறை - காவல்துறையினருக்கு பயிற்சிகள் வழங்கப்படும்!

## சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தகவல்!

சென்னை, ஜூன் 30-

மனிதநேய மக்கள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் எம்.எச். ஜவாஹிருல்லா புதிய குற்றவியல் நடைமுறைச் சட்ட மாற்றங்கள் குறித்து சட்டமன்றப் பேரவையில் பேசியதற்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அளித்த பதில் வருமாறு:-

உறுப்பினர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா அவர்கள் ஒரு கோரிக்கையை எடுத்து வைத்தார்கள்.

நாடு முழுவதும் தற்போது அமலில் உள்ள இந்திய தண்டனை சட்டம், குற்றவியல் நடைமுறைச் சட்டம் மற்றும் இந்திய சாட்சிய சட்டம் ஆகியவற்றிற்கு மாற்றாக ஜூலை 1ஆம் தேதி முதல் அமலாக்கப்படவுள்ள புதிய சட்டங்கள் மீது உறுதிப்பாடு / புரிந்துணர்தல் ஏற்பட கால அவகாசம் தேவை என்பது உண்மைதான்.

இந்தச் சட்டங்கள் இயற்றப்பட்ட போதே அவற்றை நாடாளுமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் கடுமையாக எதிர்த்தது. அதுமட்டுமல்ல, அவரே குறிப்பிட்டார், ஒன்றிய உள்துறை அமைச்சருக்கு நானே விரிவான கடிதம் எழுதி, “புதிய குற்றவியல் சட்டங்களின் செயலாக்கத்தைத் தள்ளி வைத்து, மாநிலங்களுடன் முறையான ஆலோசனை நடத்திட வேண்டும்” என்று கோரிக்கை வைத்துள்ளேன்.

எனினும், நாடு முழுவதும் இச்சட்டங்கள் வரும் 01.07.2024 முதல் நடைமுறைப்படுத்தப்படுவதோடு, CCTNS மென்பொருளும் அதற்கேற்றவாறு மாற்றம் செய்யப் படவுள்ளது.

அதனை மனதில் வைத்து, இச்சட்டம் குறித்தும் அதன் அமலாக்கம் முறையாக மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்யவும் நீதித்துறை மற்றும் காவல் துறையினருக்கு உரிய, விரைவான பயிற்சிகள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அவற்றை விரைந்து முடிக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் மாமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

---



சேலம் மத்திய மாவட்ட தி.மு.கழகத்திற்கு விக்கிரவாண்டி தொகுதியில் அன்னியூர் ஊராட்சியில் தேர்தல் அலுவலகத்தை கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர் க.பொன்முடி ஆகியோர் திறந்து வைத்தனர். உடன் மாவட்டக் கழக செயலாளர். இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. மற்றும் மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி கழக நிர்வாகிகள் உள்ளனர்.



விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதம சிகாமணி தலைமையில் விக்கிரவாண்டி தெற்கு ஒன்றியத்தில் உள்ள முட்டத்தூர் ஊராட்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான்உள்ளிட்ட தி.மு.க.வினர் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தனர். உடன் விக்கிரவாண்டி தெற்கு ஒன்றிய செயலாளர் வேம்பி ரவி, மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.